## 3.4 மாவட்ட ஊராட்சி கூட்டங்களில் மக்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வது குறித்து சில தெளிவுரைகள்

கடித எண்.2997/99/சி1, நாள். 27.06.2000 நாளிட்ட கடிதத்தில் இரமேஷ் சந்திர பண்டா, இ.ஆ.ப., அரசு செயலாளர், ஊரக வளர்ச்சி (சி1) துறை, சென்னை –9 அவர்களிடமிருந்து அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை நீங்கலாக) அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் உண்மை நகல்.

ஐயா,

பொருள் : ஊராட்சி நிர்வாகம் – மாவட்ட ஊராட்சி நிர்வாகம் – மாவட்ட ஊராட்சிக் கூட்டங்களில் மக்களவை உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வது குறித்து சில தெளிவுரைகள்.

பார்வை : தமிழ்நாடு தேர்தல் ஆணையம், சென்னை கடித எண்.3163/98/பிஇ1, நாள்.25.5.98

பார்வையில் உள்ள கடிதத்தில், மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மக்களவை உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 40ன் உட்பிரிவு (1)ல் உள்ள உறுதிமொழியை எடுப்பதில்லை என்று தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவதாகவும், இது குறித்து தெளிவுரையை அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் வழங்குமாறும் தேர்தல் ஆணையம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 25–ன்படி மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், மக்களவை உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சியின் உறுப்பினர்களாவர். மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 40ன் உட்பிரிவு (1) ன்படி உறுப்பினராக இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினர் ஆகின்ற ஒவ்வோர் உறுப்பினரும் தம் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு ஊராட்சியின் சட்டமொன்றில் உறுதியளிப்பு செய்தல் வேண்டும். அச்சட்டத்தின் பிரிவு 40ன் உட்பிரிவு (2)–ன்படி உறுப்பினரொருவராகத் தேர்ந்தேடுக்கப்பட்டவர்கள், அவர்கள் பதவிக்காலம் தொடங்குகின்ற தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாகவோ அல்லது மேற்சொன்ன தேதிக்குப் பிறகு, ஊராட்சியின் முதல் மூன்று கூட்டம் ஒன்றிலோ அவற்றில் எது பிந்தியதோ அதற்குள்ளாக ஊராட்சிகள் சட்டம் பிரிவு 40ன் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்டுள்ள பதவிப் பிரமாணம் அல்லது உறுதியளிப்பை செய்யத் தவறியபோது, அவர் பதவி வகிப்பதற்று போகும் மற்றும் அவரது இடம் காலியாகிவிட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும். அவ்வாறு உறுதியளிப்பை செய்யத் தவறிய சட்ட மன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சியில் உறுப்பினர் பதவி வகிக்கத் தகுதியற்று போவர்.

3. மேலே பத்தி 2ல் கண்டுள்ள 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கோட்பாடுகளை செயல்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேலும் இக்கடிதம் பெற்றமைக்கான ஒப்புதலை உடன் அனுப்ப கேட்டுக் கொள்கிறேன்.

அரசு செயலாளருக்காக